**செய்தி வெளியீடு எண்29** **நாள்:13.01.2021**

தங்கள் படைப்புகளில் பிறமொழிக் கலப்பு இல்லாமல் தூய தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தும் மரபுக்கவிதை படைக்கும் கவிஞர் ஒருவருக்கும், புதுக்கவிதை படைக்கும் கவிஞர் ஒருவருக்கும் 'நற்றமிழ்ப் பாவலர் விருது 2020' வழங்கப்படும் என்ற அரசாணையை (தமிழ் வளர்ச்சி (ம) செய்தி (தவ2–2)த் துறை, அரசாணை (நிலை) எண். 131, நாள் 30.12.2020)த் தமிழ்நாடு அரசு பிறப்பித்துள்ளது. அந்த அரசாணையில்,

''தங்களின் கவிதைப் படைப்புகளில் (மரபுக் கவிதை, புதுக்கவிதை) பிற மொழிக் கலப்பில்லாத தூய தமிழ்ச் சொற்களையும், புதிய தமிழ்க் கலைச்சொற்களையும் பயன்படுத்தும் பாவலர்களை ஊக்குவிக்கும் வகையில் நற்றமிழ்ப் பாவலர் விருது ஆண்டுதோறும் தமிழ் அகராதியியல் நாள் விழாவின் போது இரண்டு பேருக்கு வழங்கப்படும். இவ்விருது பெறும் விருதாளருக்கு விருதுத் தொகையாக ரூ. 50 ஆயிரம் மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்படும். இவ்விருதுக்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 1 இலட்சத்து 50 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்'' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தைச் செயற்படுத்துவது குறித்து மேற்கண்ட அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

பிறமொழிச் சொற்களைக் கலந்து பேசுவோரையும், எழுதுவோரையும் தூய தமிழைப் பயன்படுத்த வைப்பதற்காகவும், ஏற்கெனவே தூய தமிழில் பேசுவோரையும், எழுதுவோரையும் ஊக்கப்படுத்தவும், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம், கடந்த இரண்டு ஆண்டுகளாகக் கல்லூரிகள்தோறும் அகராதியியல் விழிப்புணர்வுக் கூட்டங்கள், சொல் உண்டியல் வழியாகக் கலைச்சொற்கள் சேமிப்பு, இணையம் வழியாக சொல்லாக்கப் பயிலரங்கங்கள், ஐந்து வயது முதல் ஆராய்ச்சி மாணவர்கள் வரை பங்கேற்கும் தூய தமிழ் கருத்தரங்கங்கள் சொற்குவை.காம் (sorkuvai.com) என்ற வலைத்தளத்தின் வழியாக நாள்தோறும் புதிய கலைச்சொற்களை வெளியிடுதல் 'சொல்வயல்' என்ற திங்கள் மின்னிதழ் வழியாகக் கட்டுரைகளை வெளியிடுதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் அரசாணைகள் பிறப்பிக்கப்படாமல் இல்லத்தரசிகள் பங்கேற்கும் இல்லத்தமிழ் இயக்கம், வணிக நிறுவனங்களில் தூய தமிழ்த் திட்டம் போன்ற நடவடிக்கைகள் உலகத் தமிழர்கள், இளைஞர்கள், மாணவ மாணவிகளிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன. இந்நிலையில், கவிதைப் படைப்பாளர்களை ஊக்கப்படுத்தும் வகையில், தமிழ்நாடு அரசு 'தூய தமிழ்ப் பாவலர் விருது' அறிவித்துள்ளது.

மரபுக் கவிதை, புதுக்கவிதைகளில் மொழிக் கலப்பில்லாத நல்ல தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தினால் அச்சொற்களின் வீச்சு மக்களிடமும், எதிர்காலத் தலைமுறையினரிடமும் எளிதாகச் சென்றடையும் என்றும், அந்த வகையில், பிறமொழிக் கலப்பில்லாத தூய தமிழ்ச் சொற்களையும், காலத்திற்கேற்ற புதிய தமிழ்க் கலைச்சொற்களையும் பயன்படுத்தி, கவிதைப் படைப்புகளை உருவாக்குவோரின் மொழிப் பற்றுக்கும், படைப்பாற்றலுக்கும் ஊக்கமளிக்கவும், இளம் தலைமுறையினரை மொழிக் கலப்பில்லாத படைப்பாற்றலை நோக்கி ஈர்க்கவும் ஆண்டுதோறும் அவர்களின் கவிதைப் படைப்புகளில் (மரபுக் கவிதை, புதுக்கவிதை) பிறமொழிக் கலப்பின்றித் தூய தமிழ்ச் சொற்களையும் புதிய தமிழ்க் கலைச்சொற்களையும் பயன்படுத்தும் பாவலர்கள் இருவரைத் தேர்ந்தெடுத்து, 'தமிழ் அகராதியியல் நாள் விழா'வின்போது தங்கப்பதக்கம், பாராட்டுச் சான்றிதழ் மற்றும் 'நற்றமிழ்ப் பாவலர் விருது' வழங்கி,

விருதுத் தொகையாக ரூ.50,000/– வீதம் (ரூ. 50,000 x 2) மொத்தம் ரூ. 1.00 இலட்சமும், தங்கப் பதக்கத்திற்கு ரூ.50,000/– மும் ஆக மொத்தம் ரூ. 1.50 இலட்சம் வழங்குவதற்குத் தொடரும் செலவினத்தில் நிதியொதுக்கீடு செய்தும், அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்விருதுக்கு விண்ணப்பிப்பவர்கள் அதற்கான விண்ணப்பப் படிவத்தைச் சொற்குவை.காம் (sorkuvai.com) என்ற வலைத்தளத்தில் பதிவிறக்கம் செய்து, நிறைவு செய்து **29.01.2021**ஆம் நாளுக்குள் agarathimalar2020@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ, அஞ்சல் வழியாக **"இயக்குநர், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம், நகர் நிருவாக அலுவலக வளாகம், முதல் தளம், எண். 75, சாந்தோம் நெடுஞ்சாலை, எம்.ஆர்.சி. நகர், சென்னை – 600 028"** என்ற முகவரிக்கோ 29.01.2021 மாலைக்குள் கிடைப்பது போல் அனுப்பி வைக்க வேண்டும்.

மேலும், தங்கள் படைப்புகளில் தூய தமிழ் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது என்பதை உறுதிப்படுத்தும் சான்றுகளாகக் கவிதை நூல்களை இவ்வியக்ககத்திற்கு அனுப்பி வைக்கக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**